## பங்குபற்றும் அமைப்புகள்

- **African Canadian Social Development Council**
  (416) 658-5100
- **Alexandra Park Community Centre**
  (416) 603-9603
- **Alexandra Park Neighbourhood Learning Centre**
  (416) 591-7384
- **Atkinson Co-op**
  (416) 504-6993
- **Canadian Race Relations Foundation**
  (416) 952-3500
- **Canadian Arab Federation**
  (416) 493-8635
- **Community Social Planning Council of Toronto**
  (416) 351-0095
- **Co-operative Housing Federation of Toronto**
  (416) 465-8688
- **Council of Agencies Serving South Asians**
  (416) 979-8611
- **Davenport-Perth Neighbourhood Centre**
  (416) 656-8025
- **Delta Family Resource Centre**
  (416) 747-1172
- **Eastview Community Neighbourhood Centre**
  (416) 393-6354
- **Fort York Food Bank**
  (416) 203-3011
- **Hispanic Development Council**
  (416) 516-0851
- **Hong Fook Mental Health Association**
  (416) 493-4242
- **Jamaican Canadian Association**
  (416) 746-5772
- **Jane Finch Community Legal Services**
  (416) 398-0677
- **Jane/Finch Concerned Citizens Organization**
  (416) 880-2870
- **Justice for Children and Youth**
  (416) 920-1633
- **Kensington-Bellwoods Community Legal Services**
  (416) 924-4244
- **Midaynta Association of Somali Serving Agencies**
  (416) 544-1992
- **NEW Experiences for Newcomer Women**
  (416) 469-0196
- **Ontario Council of Agencies Serving Immigrants**
  (416) 322-4950
- **Regent Park Neighbourhood Initiative**
  (416) 981-6738
- **Scadding Court Community Centre**
  (416) 392-0335
- **Schizophrenia Society of Ontario**
  (416) 449-6830
- **South Asian Family Support Services**
  (416) 431-4847
- **South Asian Legal Clinic of Ontario**
  (416) 542-9146
- **South Asian Women's Centre**
  (416) 537-2276
- **St. Christopher House**
  (416) 848-7980
- **St. Stephen's Community House**
  (416) 925-2103
- **Street Health**
  (416) 921-8668
- **The 519 Church Street Community Centre**
  (416) 392-6878
- **Toronto Community Housing**
  (416) 981-5500
- **Toronto Police Accountability Coalition**
  (416) 977-5097
- **Toronto Police Service**
  (416) 808-2800
- **YMCA Youth Intervention and Outreach Services**
  (416) 504-1710

The Law Foundation of Ontario

Scadding Court Community Centre

Toronto

Toronto Community Housing

Canadian Heritage Patrimoine canadien

Canada

# வெறுப்புக் குற்றங்கள்

# CEAPC

**COMMUNITY EDUCATION & ACCESS TO POLICE COMPLAINTS DEMONSTRATION PROJECT**

**சமூக அறிவு புகட்டல், காவற்துறை தொடர்பான முறையீடுகள் அணுகல் செயல்விளக்கத் திட்டம்**

Scadding Court Community Centre

ஸ்காடிங் கோர்ட் கொம்யூனிற்றி சென்ரர்

Language: Tamil

## CEAPC
## திட்ட அறிமுகம்

சமூக உறுப்பினர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு காவற்துறை தொடர்பான முறையீடுகள் திட்டம் கிடைக்கக்கூடியதாக, அணுகக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதும், இதுபற்றிய அறிவுபெறும் சந்தர்ப்பங்களை வழங்குவதுமே CEAPC திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

இக்குறிக்கோளினை அடைவதற்கு எமக்கு உதவுவதற்காக 33 பங்குபற்றும் அமைப்புகள் எம்முடன் சேர்ந்து உள்ளன. வெறுப்புக் குற்றங்கள் பற்றியும் வெறுப்புக் குற்றம் ஒன்றுக்கு நீங்கள் ஆளாக நேர்ந்தால் செய்வதென்ன என்பது பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ள நாங்கள் உதவுவோம்.

## வெறுப்புக் குற்றம் என்றால் என்ன?

வெறுப்புக் குற்றம் என்பது குற்றவியல் (கிரிமினல்) ரீதியான ஒரு குற்றச்செயலாகும். ஒருவரின் **இனம், தேசிய அல்லது கலாச்சார மூலம், மொழி, நிறம், சமயம், பாலியல் ஊளப்பாங்கு, வயது, மன அல்லது உடல் இயக்கக் குறைபாடு, பால்** போன்றவற்றால் அல்லது இதுபோன்ற வேறொரு காரணியினால் தூண்டப்பட்டு அவருக்கு எதிராக இழைக்கப்படும் ஒரு செயல் வெறுப்புணர்வுக் குற்றம் எனப்படும்.

***ரொறொன்ரோ காவற்துறைச் சேவையினர் 2003 ஆம் ஆண்டில் 149 வெறுப்புக் குற்றச் சம்பவங்களைப் பதிவு செய்து இருந்தனர். வெறுப்புக் குற்றங்களின் மிகப் பொதுவான தூண்டற் காரணியாக இருந்தது இனம் (33%) ஆகும். இரண்டாவதாக இருந்தது சமயம் (26%) ஆகும்.***

## வெறுப்புக் குற்றங்களுக்குச் சில உதாரணங்கள்

வெறுப்புக் குற்றங்களுக்கான சில உதாரணங்களில் இவையும் அடங்கும்:

- வெறுப்பால் தூண்டப்பட்டு உடலால் அல்லது வார்த்தைகளால் தாக்குதல்
- துண்டுப்பிரசுரங்கள், கடிதங்கள், மின்னஞ்சல் வடிவத்தில் வெறுப்புக் குற்றம் சம்பந்தப்பட்ட தபாலினைப் பார்த்தல் அல்லது பெற்றுக் கொள்ளுதல்
- உங்களது அடையாள அம்சங்களின் காரணமாகப் பயமுறுத்தப்படுவது அல்லது இம்சைக்கு உள்ளாக்கப்படுவது
- வெறுப்பால் தூண்டப்பட்டு இழிவுச் சித்திரம் வரைதல் அல்லது உடைமைச் சேதம் விளைவித்தல். உதாரணமாக வழிபாட்டு ஸ்தலம் ஒன்றில் இனரீதியான துர்வார்த்தைகளை நிற மைகொண்டு எழுதுவது

***நீதித்துறைப் புள்ளிவிபரவியல் மையத்தின் தகவலின்படி 2001 ஆம், 2002 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் மிகப்பொதுவாக நடைபெற்ற வெறுப்புக் குற்றச் சம்பவங்கள் பின்வருமாறு இருந்தன:***
***விஷமம்/உடைமைச்சேதம் (29%)***
***உடலால் தாக்கப்படுதல் (25%)***
***வாய்மொழியால் பயமுறுத்தல் (20%)***
***வெறுப்புப் பிரச்சாரம் (13%)***

## நீங்கள் செய்யக்கூடியவை

வெறுப்புக் குற்றம் ஒன்று இடம்பெறுகையில் கூடிய விரைவில் அது சம்பந்தமான விபரங்களைக் குறித்து வைத்துக்கொள்ளுவது சிறந்தது. தகவல் சரியானவை என்று உறுதி செய்துகொள்ளுங்கள். சம்பவத்தின் தொடர்பில் யார், என்ன, எப்பொழுது, எங்கே, ஏன், எப்படி என்பவற்றுக்குப் பதில் கண்டுபிடியுங்கள். துணையாக உள்ள ஆவணங்கள் உங்கள் வழக்கிற்குப் பலம் சேர்க்கும். எழுத்தில் உள்ள வாக்குமூலம், புகைப்படங்கள், ஒளிநாடா, சாட்சிகள் என்பவை இதில் அடங்கும்.

இவ் ஆவணங்கள் குறித்த சம்பவம் வெறுப்பால் தூண்டப்பட்டது எனத் தெளிவுபடுத்த வேண்டும். வெறுப்புக்குற்றம் ஒன்று நடைபெற்றுள்ளது என்பதற்கு அத்தாட்சி இருக்கையில், குற்றம் செய்பவர்கள் கூடிய தண்டனையைப் பெறமுடியும்.

## யாருடன் தொடர்பு கொள்வது

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த யாராவது வெறுப்புக் குற்றத்துக்கு ஆளாக நேர்ந்தால், நீங்கள் இவற்றைச் செய்யவேண்டுமென மனதில் கொள்ளுங்கள்: அமைதியைக் கடைப்பிடியுங்கள், எல்லா அத்தாட்சியையும் எடுத்து வையுங்கள், சம்பவம் பற்றிய முழுத்தகவலையும் குறித்து வையுங்கள், காவற்துறையினரை அழையுங்கள்.

வெறுப்பால் தூண்டப்படும் குற்றங்களை ரொறொன்ரோ காவற்துறை சேவைகள் வெறுப்புக் குற்றப் பிரிவு (Toronto Police Services Hate Crime Unit) கண்காணித்து வருகிறது. வெறுப்புக் குற்றம் ஒன்றைப்பற்றி நீங்கள் இப்பிரிவிடம் அறிவிக்கலாம். அழைக்கவேண்டிய தொலைபேசி எண்:

(416) 808-3500

உதவிக்கு ஸ்காடிங்கோர்ட் கொம்யூனிற்றி சென்ரர் அல்லது (மறுபக்கத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ள) எம்முடன் பங்குபற்றும் அமைப்புகளில் ஒன்றுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். அல்லது பின்வரும் இணையத்தளத்துக்குச் சென்று ஒரு வெறுப்புக் குற்றப் படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்யலாம்:

www.scaddingcourt.org
www.cassa.on.ca

அவசர நிலைமையானால் அழையுங்கள்:

**9-1-1**

***மேலதிக தகவலுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்***

Project Coordinator
Scadding Court Community Centre
707 Dundas Street West
Toronto, Ontario M5T 2W6

Phone: (416) 392-0335 x 233
Fax: (416) 392-0340
Email: lsarangi@scaddingcourt.org
www.scaddingcourt.org